ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேசன்

# வருடாந்த அறிக்கை
# 2016-2017

# பொருளடக்கம்


நோக்கு, இலக்கு, வணிகத்துறை இலக்குகள் ........ 04

இலக்குகள், செயற்பாடுகள் மற்றும் சேவைகள், இக்காலப்பகுதியின் முன்னேற்றம்........ 05

வணிகத்துறை தகவல்கள்........ 06

தலைவரின் செய்தி ........ 07

சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் பிரிவுகளின் தலைவர்கள்........ 08 - 09

எமது விற்பனை பொருட்களின் விபரம்........ 10 - 12

வணிக மீளாய்வு........ 13

நாடளாவிய ரீதியில் கிளை வலையமைப்பு ........ 14

தொழில்வாய்ப்பை அதிகரித்தல் ........ 15

இணையத்தள சேவை விநியோக அமைப்பு ........ 16

வர்த்தக ஆளுமை........ 17

நிதி சிறப்பம்சங்கள்........ 18

வரைபட விளக்கம் ........ 19 - 20

வருமான வரைபடம் 2000/2001 வழ 2016/2017 ........ 21

எஸ்.ரி.சியின் 2016-2017ஆம் ஆண்டுக்கான பிரிவுகளின் செயற்திறன் ........ 22

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ........ 23

தொகுக்கப்பட்ட வருமான அறிக்கை........ 24

நிதி நிலை அறிக்கை ........ 25

பங்குகளில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான அறிக்கை........ 26

காசுப் பாய்ச்சல் கூற்று ........ 27

ஆம் நிதி கூற்றுக்கான குறிப்புகள் ........ 28 - 48

# நோக்கு, இலக்கு, வணிகத்துறை இலக்குகள்

## நோக்கு

தேசிய வணிகத்துறையில் முதலிடம் வகித்தல்

## இலக்கு

அரசாங்கத் துறைக்கு தேவையான சகல பொருட்களையும் மற்றும் சேவை களையும் பெற்றுக் கொடுக்கும் அடிப்படை செயற்பாட்டுடன் எமது செயற்திறனை உயர்த்தும் அதே நேரத்தில் மற்ற அம்சங்களுக்கும் சேவை யைப் பெற்றுக் கொடுத்து இதில் சம்பந்தப்பட்டவர்களின் நலனை ஸ்திரப்படுத்தி இலங்கையை ஆசியாவின் வர்த்தகதுறையில் விந்தைக்குரிய நாடாக மாற்றுவதற்கு உறுதுணை புரிதல்.

## வணிகத்துறை இலக்குகள்

நியாயமான வருமானத்தை பெற்று ஒருவருடைய தனிப்பட்ட தொழில் ரீதியான அபிவிருத்திக்கு பங்களிப்பை அளித்தல் மற்றும் குறிப்பிட்ட பொருள் விற்பனையில் முன்னணியில் திகழ நடவடிக்கை எடுத்தல்.

# இலக்குகள், செயற்பாடுகள் மற்றும் சேவைகள், இக்காலப்பகுதியின் முன்னேற்றம்

## இலக்குகள்

- பலதரப்பட்ட பொருட்களின் விற்பனை மற்றும் சேவைகள் மூலம் சந்தைப்படுத்தலை ஸ்திர நிலையில் வைத்திருத்தல்.
- சர்வதேச நாடுகளின் நாமங்களை எங்கள் நாட்டின் நம்பிக்கைக்குரிய வர்த்தக நாமங்களின் பிரதிநிதிகளாக இருத்தல்.
- அமைப்பின் வருமானத்தையும். இலாபத்தையும் அதிகரித்து நிறுவனத்தின் நற்பெயரை ஸ்திரப்படுத்தல்.
- அரசாங்கத்துறையின் தேவைகளை சரியான முறையில் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அபிவிருத்திக்கான இலக்குகளை அடைதல்.
- நிறுவனத்தின் பிரதான பொருள் முதலீட்டு துறையின் பாவனையாளர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அரசாங்கம், பாவனையாளர்கள் மற்றும் ஊழியர்களின் கவனத்துக்கு அமைய உற்பத்தியை அதிகரித்தல்.

## செயற்பாடுகள் மற்றும் சேவைகள்

- பாவனையாளர் கட்டமைப்பை விஸ்தரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- தற்போதுள்ள விற்பனை நிலையங்களை விட புதிய விற்பனை நிலையங்களை திறந்து வைத்தல்.
- தனி வாடிக்கையாளர் ஒருவரை தேவைக்கு ஏற்ப பொருட்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- வலையமைப்பின் மூலம் வணிக முகாமைத்துவம் மற்றும் புள்ளிவிபர முகாமைத்துவத்தை வளங்களை திட்டமிடும் அமைப்பின் செயற்பாட்டின் ஊடாக கையாண்டு பொருள் கொள்வனவுக்கான அங்கீகாரத்தையும் மனித வள முகாமைத்துவத்தையும் பெருக்குதல்.
- பிரதானமாக விற்பனையாகும் பொருட்களுக்கு அதிக கவனத்தை செலுத்துதல்.

## இக்காலப்பகுதியின் முன்னேற்றம்

ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் கேப்பரேசன் ரூபா 3,749 மில்லியனை வருமானமாகப் பதிவு செய்தது. மீளாய்விலிருந்த குறிப்பிட்ட வருடத்தின் போது நிறுவனத்தின் ஏனைய செயற்பாடுகள் மூலமாக மேலும் ரூபா 12.2 மில்லியன் வருமானத்தை இவ்வருடத்தில் பெறக்கூடியதாக இருந்தது. வரிக்கு முன்னதான நிகர இலாபம் ரூபா. 61.2 மில்லியனாகப் பதிவானது. இக்காலப்பகுதியில் மொத்த பங்குகளின் எண்ணிக்கை 759 மில்லியன் ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

2017 மார்ச் மாதம் ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் கேப்பரேசனில் 425 ஊழியர்கள் பணிபுரிகிறார்கள்.

நாம் எதிர்காலத்தில் ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் கேப்பரேசன் என்ற பெயரில் புதிய உற்பத்திகளை சந்தைப்படுத்த தீர்மானித்துள்ளோம். குறிப்பாக எஸ்.ரி.சி. போட்டோ கொப்பி காகிதங்கள் மற்றும் காகிதாதிகளை எஸ்.ரி.சி. ஜெனரல் குளிர்சாதனங்களையும் உற்பத்தி செய்ய உள்ளோம். இவ்வாறான புதிய உற்பத்திகளும் சந்தைக்கு நடைமுறைப்படுத்த உள்ளன.

# வணிகத்துறை தகவல்கள்

| | |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் : | ஸ்ரீலங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேசன் லிமிட்டெட் |
| சட்டபூர்வநிலை : | எஸ்.ரி.சி. ஜெனரல் டிரேடிங் கம்பனிலிமிட்டெட்டின் பெயர் 01.10.2010இல் ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் ஜெனரல் கோப்பரேசன் என்று 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்ககம்பனிசட்டத்தின் கீழ் மாற்றப்பட்டது. இதற்குமுன்னர்1982ஆம்ஆண்டின் 17ம் இலக்கபொதுக் கம்பனிசட்டத்தின் கீழ் இது இருந்துவந்தது. அதற்குமுன்னர் இந்நிறுவனம் ஸ்ரீலங்கா ஸ்டேட் டிரேடிங் ஜெனரல் கோப்பரேசன் என்றபெயரில் 1970ஆம் ஆண்டு 33ஆம் இலக்க ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் சட்டத்தின் கீழ் அழைக்கப்பட்டது. இந்தநிறுவனம் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது |
| தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளர் : | கலாநிதி ஏ.எம். ஜமீல் |
| பணிப்பாளர்கள் சபை : | திரு. எஸ்.எல்.டீன்<br>திரு. டி. ஜீவநாதன்<br>திரு. வீ. நிதர்ஷன்<br>திரு. ரி.வி. வீரசேன<br>திரு. எஸ்.இலங்கதிலக்க<br>திரு. கே. ஆரியவன்ச |
| பணிப்பாளர்சபை செயலாளர் : | திரு. கே.ஜி.எஸ்.பி. விஜேரத்ன |
| கம்பனி செயலாளர் : | கே.எல்.மெனேஜ்மென்ட் கன்சல்டன்ட் பிரைலிமிட்டெட் |
| கணக்காய்வாளர்கள் : | எம்..ஃ.எஸ். ஏர்னஸ்ட் அன்ட் யங்., பட்டய கணக்காளர்<br>இல. 201, டி சேரம் பிளேஸ்,<br>தபால் பெட்டி இல. 101,<br>கொழும்பு - 10 |
| வங்கிகள் : | மக்கள் வங்கி<br>இலங்கை வங்கி<br>என்.டி.பி வங்கி<br>சம்பத் வங்கி |
| பதிவு செய்யப்பட்ட காரியாலய இல. : | தபால்பெட்டி இல. 1686<br>100. நவம் மாவத்தை,<br>கொழும்பு -2<br>இலங்கை.<br>தொலைபேசி : 242 2341-3<br>பெக்ஸ் : 244 7970<br>மின்னஞ்சல் : lankagen@sltnet.lk<br>இணையத்தளம்: www.stcgeneral. Com |
| பதிவு செய்யப்பட்ட காரியாலய இல. : | PB 863 |
| ஊழியர்களின் எண்ணிக்கை : | வருட இறுதியில் 425 ஊழியர்கள் கம்பனியில் சேவையில் ஈடுபடுகிறார்கள். |

# தலைவரின் செய்தி



### மெக்ரோ பொருளாதார கண்ணோட்டம்

மொத்த உள்நாட்டு உற்பத்தியானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 / 2017 ஆம் ஆண்டில் 4.8மூ இல் இருந்து 4.4மூ ஆக குறைவடைந்துள்ளது. இந்த மாற்றம் காரணமாக தனிநபர் வருமானத்தில் சற்று வீழ்ச்சியைக் காட்டியதுடன் கடந்தாண்டுடன் ஒப்பிடும் போது தனிநபர் வருமானமானது 3,744 ஐக்கிய அமெரிக்க டொலரில் இருந்த 3,727 ஐக்கிய அமெரிக்க டொலராக குறைவடைந்துள்ளது.

வரட்சி மற்றும் வெள்ளப் பெருக்குகளினால் இலங்கையின் விவசாயத்துறையானது நாட்டில் எதிர்மறையான வளர்ச்சி விகிதத்தில் சாதனையை ஏற்படுத்தியதுடன் -4.2 எனும் பாதகமான வளர்ச்சியை காட்டியது. இதனால் நாட்டின் நாலாபாகங்களிலும் உள்ள விவசாய பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கினர். எனினும் அரசாங்கம் இந்த விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கில் முன்னுரிமை அடிப்படையில் சமூக நலன்புரி மற்றும் விவசாய பாதுகாப்பு நிதி உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தது. பணவீக்கமானது 2016/2017ஆண்டில் 6.7மூ காணப்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில் இலங்கையின் பொருளாதாரமானது 2016/2017 ஆண்டில் எதிர்பார்த்த அளவுக்கு விருத்தியை ஏற்படுத்தவில்லை. இதன் காரணமாக சந்தையில் கடுமையான போட்டி தன்மை தொடர்ச்சியாக காணப்பட்டது. எவ்வாறாயினும் இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் (ளுவுஊ) சில முன்னேற்பாடான செயற்பாடுகள் மற்றும் சிறந்த முகாமைத்துவத்தினால் வணிக செயற்பாட்டில் சாதகமான முன்னேற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

### 2016.'.2017 ஆம் ஆண்டுக்கால் செயற்பாடுகள்.

STC யின் வியாபார வருமானமானது, 3,848 மில்லியன்களாகப் பதிவானது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருட விற்பனையானது 27% ஆல் அதிகரித்துள்ளமையை நுண் பகுப்பாய்வின் ஊடாக அவதானிக்க முடிந்தது. இந்த வருமான அதிகரிப்பிற்கு பிரதான உந்து சக்தியாக இரண்டு பிரிவுகள் காணப்பட்டதுடன் உற்பத்திப் பிரிவுகளான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள் பிரிவு என்பன முறையே 85% மற்றும் 61% வீத பங்களிப்பை நல்கின. கடந்த வருடத்தை விட ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் 60% வீதத்தில் அதிகரித்தன.

மொத்த இலாபம் 103 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. எனினும், மொத்த செலவினம் 103 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. இதனை மேலதிகமாக பெறப்பட்ட மொத்த இலாபத்தில் ஈடு செய்யக் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் STC யின் அறவிட முடியாத கடனாளிகளிடம் பெறப்பட்ட பணம் மற்றும் குறைவாக விற்பனையாகும் பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்தமையால் பெற்றுக் கொண்ட பணம் ஆகியவற்றினால் வட்டி செலவினங்களை குறைத்துக் கொள்ள முடியுமாக இருந்தது. மொத்த தேறிய வட்டி செலவு 15மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டதுடன் ஊழியர் நலன் சார்ந்த விடயங்களில் 11 மில்லியன் எனும் சாதகமான வளர்ச்சியை எடுத்துக் காட்டியது. வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் 51.5 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. இது 2016/2017ஆண்டுடன் ஒப்பிடும் போது வரிக்குப் பின்னரான நிகர இலாபம் 99மூ வளர்ச்சியைக் காட்டுகின்றது. ஒரு பங்கின் மூலம் கிடைக்கும் வருமானமானது ரூ 2.67 இல் இருந்து 4.00ரூபாவாக அதிகரித்துள்ளது.

### எதிர்காலத்திட்டங்கள்

நான் பணிப்பாளர் சபை மற்றும் நிறுவன முகாமைத்துவத்துடன் இணைந்து STC நிறுவன வளர்ச்சிக்காகவும் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களின் நலன் கருதி பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளேன். வாடிக்கையாளரின் தேவையை அறிந்து அதற்கான செயற்திட்டங்களை முன்னெடுக்க உள்ளதுடன், விநியோக செயற்பாடுகள், சந்தையில் STC யின் பிரத்தியேக வர்த்தக நாமங்களை உருவாக்கும் வகையில் புதிய உற்பத்திகளை சந்தைப்படுத்த உள்ளதுடன், ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய திட்டமிட்டுள்ளோம். நீண்டகால அறிவிட முடியாத கடன்களை STC நிறுவனம் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதுடன் குறைவாக விற்பனையாகும் பொருட்களை அதிகளவில் விற்பனை செய்யப்படும் பொருட்களாக மாற்றியமைப்பதே தற்போது நாம் எதிர்நோக்கியுள்ள இன்னுமொரு பணியாக காணப்படுகிறது.

STC நிறுவனம் சாய்ந்தமருது மற்றும் பொலன்னறுவை மக்களின் தேவை அறிந்து பிராந்திய நிலையங்களை ஆரம்பித்துள்ளது. எதிர்வரும் ஆண்டில் பாரிய காட்சியறை ஒன்றை நாரஹேன்பிட்டியவில் திறப்பதற்கான முன்னேற்பாடுகள் நிறைவடைந்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் மூலதனம் மற்றும் முதலீடுகளை செய்வதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

வர்த்தக மற்றும் கைத்தொழில் கௌரவ அமைச்சர் மற்றும் பணிப்பாளர் சபையில் இருக்கும் எனது நண்பர்கள், எமது வங்கியாளர்கள், வாடிக்கையாளர்கள், வியாபாரப் பங்காளிகள் மற்றும் முகாமைத்துவத்தினர், ஆகியோர் எமது நிறுவனத்தின் வெற்றிக்கு தொடர்ந்தும் அர்ப்பணித்தமைக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

கலாநிதி ஏ.எம் ஜெமீல்
தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர்.

# பணிப்பாளர்கள் சபை



## இடது இருந்து வலம

1 திரு. கே.ஜி.எஸ்.பி. விஜேரத்ன
பணிப்பாளர்சபை செயலாளர்

2 திரு.எஸ்.எல்.டீன்
செயற்பாட்டுப் பணிப்பாளர்

3 கலாநிதி ஏ.எம். ஜமீல்
தலைவர் / நிர்வாகப் பணிப்பாளர்

4 திரு. எஸ்.இலங்கதிலக்க
பணிப்பாளர்

5 திரு. ரி.வி. வீரசேன
பணிப்பாளர்

6 திரு. டி. ஜீவநாதன்
பணிப்பாளர்

7 திரு. கே. ஆரியவன்ச
பணிப்பாளர்

## சிரேஷ்ட முகாமைத்துவம்



திரு பெரகும் விஜேரத்ன
பொது முகாமையாளர்



திரு. உபாலி அபேசேகர
பிரதிப் பொது முகாமையாளர்
(வணிக செயற்பாட்டு நிர்வாகம்)



திரு ஹெரில் ஹொனிஸ்
நிதி முகாமையாளர்



திருமதி. சமிலா இத்தமல்கொட
பிரதி பொது முகாமையாளர்

# சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் பிரிவுகளின் தலைவர்கள்

## சிரேஷ்ட முகாமைத்துவம்

| | |
|---|---|
| தலைவர் / நிர்வாகப் பணிப்பாளர் | கலாநிதி ஏ.எம். ஜமீல் |
| செயற்பாட்டுப் பணிப்பாளர் | திரு.எஸ்.எல்.டீன் |
| பொது முகாமையாளர் | திரு. பெரகும் விஜேரத்ன |
| பிரதிப் பொது முகாமையாளர் (வணிக செயற்பாட்டு நிர்வாகம்) | திரு. உபாலி அபேசேகர |
| பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவளம் மற்றும் போக்குவரத்து) | திரு. உபாலி கோரலகெதர |
| நிதி முகாமையாளர் | திரு. மெரில் நொனிஸ் |
| உதவி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) | திருமதி. சமிலா இத்தமல்கொட |

## பிரிவுகளின் தலைவர்கள்

**இரசாயன மற்றும் அவை சம்பந்தப்பட்ட**
பிரதிப் பொது முகாமையாளர் — திரு. உபாலி அபேசேகர

**காரியாலய விநியோகப் பிரிவு**
பதில். உதவி முகாமையாளர் — திருமதி சீதா ஜெயந்தி

**வீடு மற்றும் புனர்நிர்மாணப் பிரிவுகள்**
உதவி முகாமையாளர் — திருமதி என்.பி. ரணசிங்க

**ICT பிரிவு**
பதில். சிரேஷ்ட முகாமையாளர் — திரு. நிரோஷ் பண்டார
முகாமையாளர் ICT சேவை — திரு. பிரியங்கர அபோன்சு
ஊதவி முகாமையாளர் ICT — திரு. எம்.ஐ.எம். அசார்
உதவி முகாமையாளர்-விற்பனை — திருமதி அனுபமா பீரிஸ்

**மின்னியல் மற்றும் இலத்திரனியல் பிரிவு**
பதில் சிரேஷ்ட முகாமையாளர் — திரு. விபுல டி சில்வா

**விவசாயம், இயந்திரம் மற்றும் உபகரண பிரிவு**
உதவி முகாமையாளர் — திருமதி மதுசானி அகுருகொட

**ஸ்வசுக்தி**
முகாமையாளர் — திருமதி டி.கே.ஜசூர்யா

**நிர்மாண, இயந்திர உபகரண மற்றும் காரியாலய தளபாடம்**
உதவி முகாமையாளர் — திரு. அனுரத்த மகேஷ்

**தன்னியக்க பொருட்களின் பிரிவு**
பதில். உதவி முகாமையாளர் — திருமதி ஆர். சுகந்தி

**எப்.எம்.சி.ஜி.பிரிவு**
ஜுனியர் நிர்வாகி — திரு. டி.பி. குமார

**காட்சியறை செயற்பாடுகள்**
முகாமையாளர் — திரு. கயான் ரணதுங்க

**தீர்வையற்ற கடை**
நடிப்பு முகாமையாளர் — திரு. கெனத் ஜயசுந்தர

**பொருள் கொள்வனவு பிரிவு**
சிரேஷ்ட முகாமையாளர் — திரு. மகேஷ் மெண்டிஸ்

**நிதிப் பிரிவு**
நிதி முகாமையாளர் — திரு. மெரில் நொனிஸ்

**தகவல் தொழில்நுட்பப் பிரிவு**
பதில் சிரேஷ்ட முகாமையாளர் — திரு. நிரோஷ் பண்டார

**கணக்காய்வு பிரிவு**
முகாமையாளர் - உள்ளக கணக்காய்வு — திருமதி லலனி சமுத்ரா

**மனித வள பிரிவு**
பிரதி பொது முகாமையாளர் — திருமதி. சமிலா இத்தமல்கொட

## எஸ்.ரி.சி. கிளைகள் மற்றும் காட்சியறைகள்

நவம் மாவத்தை காட்சியறை
இல. 100, நவம் மாவத்தை, கொழும்பு -02.

குருநாகலை காட்சியறை
இல. 243/03/01, புத்தளம் வீதி குருநாகலை.

கண்டி காட்சியறை
இல. 449, வில்லியம் கோபல்லாவ மாவத்தை
கண்டி.

மாத்தறை காட்சியறை
இல. 11,வை.எம்.சி.ஏ. கட்டிடம் ஸ்டேசன் வீதி,
மாத்தறை.

அனுராதபுரம் காட்சியறை
இல. 561பி, 38, 4வது ஒழுங்கை
அனுராதபுரம்.

யாழ்ப்பாணம் காட்சியறை
இல. 127 எம்.பி.சி.எஸ். கட்டிடம்
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கல்கிஸ்ஸ காட்சியறை
இல. 103, சொப்பிங் கொம்பிலெக்ஸ்
கல்கிஸ்ஸ.

சாய்ந்தமருது காட்சியறை
இல. 452, பிரதான வீதி, சாய்ந்தமருது.

பொலன்னறுவை காட்சியறை
இல. 75/B, 2 எலபார, கதுருவெல.

# எமது விற்பனை பொருட்களின் விபரம்



## காரியாலய பொருட்கள் மற்றும் உபகரணங்கள்

டபள் ஏ மற்றும் ஏனைய போட்டோ கொபி காகிதங்கள், அட்டைகள், காகித புத்தகங்கள், பைல்கள், போல்டர்கள், என்விலப், காரியாலய பைல், பிரிப் கேஸ், பேனைகள், பென்சில்கள், வைட் போட் மார்க்கர்கள், கத்திரி, பேப்பர் கத்தி மற்றும் கல்குலேட்டர்கள், ஸ்டேப்ளர்கள், பன்சர், கணணிகளுக்கான டிஸ்கட்கள், டிவிடி கள், யு.எஸ்.பி உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள்.



## வீட்டு பொருட்கள்

அலுமினியம் பொருட்கள், கோசலின் பொருட்கள், னொன் ஸ்டிக் சமையலறைப் பொருட்கள், சுத்தப்படுத்துவதற்கான சகல பொருட்கள், விளையாட்டு உபகரணங்கள், சகல விதமான பிளாஸ்டிக் பொருட்கள், கோப்பைகள், சோசர்கள், சமையலறைக்குத் தேவையான பொருட்கள், கேத்தல்கள், ஜொக்குகள், பொருட்களை வைக்கும் ரக்ஸ், டிரேக்கல், சுடுதண்ணீர் போத்தல்கள், குடிநீர் சுத்திகரிக்கும் பிள்டர்கள், தலையணிகள், மெட்ரஸ், படுக்கை விரிப்பு, ரம்பர் மற்றும் தும்பு கார்பட்கள், எடைபார்க்கும் இயந்திரங்கள், மலை கோர்ட், குடைகள், டிசு பேப்பர், சேவியட்கள் மற்றும் சுவர் கடிகாரங்கள்.



## தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் கருவிகள்

மடிக்கணனிகள், சாதார கணனிகள், பிரிட்டர்கள், பெக்ஸ் மெசின்கள், ஸ்கேனர்கள், யு.பி.எஸ் மற்றும் போட்டோ கொபி மெஷின்கள்.



## மின்சாரவியல் மற்றும் இலத்திரணியவியல்

எயா கண்டிசனர்கள், கே.டி.கே பேன்கள், டிஜிடல் கெமராக்கள், வீடியோ கெமராக்கள், பிலேஷ் லைட், மல்டிமீடியாக பொருட்களான ஸ்கிரீன்கள் உள்ளக வெளியக ஒலி பெருக்கிகள், ஓடியோ எம்லிபயர்கள், மிக்ஷர்ஸ் மற்றும் மைக்ரோ போன்கள், ஜெனரேட்டர்கள், தொடர்பு கட்டுப்பாடு செயற்பாடு, சி.சி.டி.வி கமராக்கள் விரல் பதிவு உபகரணங்கள், சி.எவ்.எல்.குளோரசன் பல்புகள், அவசர மின் குமிழ்கள், தொலைபேசி சாதனங்கள் உட்பட ஏனைய இலத்திரனியல் பொருட்கள்.

# எமது விற்பனை பொருட்களின் விபரம்




## குஆஊபு பொருட்கள் (இவை வாடிக்கையாளர்கள் அதிகமாக கொள்வனவு செய்யும் பொருட்கள்)

வீட்டுப் பாவனைக்கான பொருட்கள், தனிப்பட்ட பாவனைக்கான பொருட்கள், உணவுப் பொருட்கள்.




## டயர் மற்றும் எக்ஸயிட் பெற்றறிகள்

APOLLO DUNLOP PIRELLI
YOKOHAMA NANKANG
EXIDE INDUSTRIES LIMITED

எபலோ, யோகாமா, னென்கில், பிரேலி, டன்லப், எக்சையிட் பட்டரிகள்




## விவசாய உபகரணங்கள், இயந்திர கருவிகள் மற்றும் ஏனையவை

முள்ளுக் கம்பிகள், புல்தரை வெட்டும் இயந்திரங்கள், புல்தரை வெட்டும் சாதனங்கள், வெல்டிங் செய்யும் பொருட்கள், கத்திகள், சுத்தியல்கள், சகல விதமான இயந்திரங்களுக்கான சாதனங்கள், கைப்பாவணைக்கான பொருட்கள், நீர் பாய்ச்சும் இயந்திரங்கள், பாதுகாப்ப உபகரணங்களான எல்மட்கள், கையுறைகள், காலணிகள், ஜம்பர்கள், சவல்கள், ரேக்கள், பொலிதீன் சீலர்கள் போன்ற இயந்திரப் பொருட்களாகும்.



## மோட்டார் சைக்கிள்

மோட்டார் சைக்கிள்கள் (100 சி.சி, 110 சி.சி, 125 சி.சி, 180 சி.சி), ஸ்கூட்டர்கள், மோபெட் சைக்கிள்கள், பஜாஜ், டி.வி.எஸ்.

# எமது விற்பனை பொருட்களின் விபரம்



## உள்ளக வடிவமைப்பு மற்றும் காரியாலய தளபாடங்கள்

இரும்பு தளபாடங்கள், (நாற்காலிகள், மேசைகள், கெபினட்கள், புத்தக அலுமாரிகள்)

பலகையிலான தளபாடங்கள், (நாற்காலிகள், மேசைகள், கெபினட்கள், புத்தக அலுமாரிகள்)

மெலமைன் தளபாடங்கள் (நாற்காலிகள், மேசைகள், கெபினட்கள், புத்தக அலுமாரிகள்)



## இரசாயன வகைகள்

கைத்தொழில் இரசாயணப் பொருட்கள், ஆய்வு கூட இரசாயணப் பொருட்கள், விசேஷ இரசாயணப் பொருட்கள், தெரிவு செய்யப்பட்ட வெடிக்கக் கூடிய இரசாயணப் பொருட்கள்




## சுங்கத்தீர்வையற்ற கடைத் தொகுதி

இராஜதந்திரிகள் மற்றும் இராஜதந்திர காரியாலங்களுக்கு தேவையான சுங்கத் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல்.

# வணிக மீளாய்வு

விற்பனை வளர்ச்சி (ரூபா. மி)




வரிக்கு பின்னரான நிகர இலாப வளர்ச்சி (ரூபா. மி)



# நாடளாவிய ரீதியில் கிளை வலையமைப்பு



# தொழில்வாய்ப்பை அதிகரித்தல்

## 2012 - 2017

2012/2013 இல் 2016/2017ம் ஆண்டு வரையான ஊழியர்களின் எண்ணிக்கை

**2012-2013**

மொத்த ஊழியர்கள 318

- கம்பனியுடன் நேரடி தொடர்பில் உள்ள உத்தியோகத்தர்கள் **158**
- விற்பனை உத்தியோகத்தர்கள **160**

**2013-2014**

மொத்த ஊழியர்கள 392

- கம்பனியுடன் நேரடி தொடர்பில் உள்ள உத்தியோகத்தர்கள **214**
- விற்பனை உத்தியோகத்தர்கள **178**

**2014-2015**

மொத்த ஊழியர்கள 395

- கம்பனியுடன் நேரடி தொடர்பில் உள்ள உத்தியோகத்தர்கள **208**
- விற்பனை உத்தியோகத்தர்கள **187**

**2015-2016**

மொத்த ஊழியர்கள 393

- கம்பனியுடன் நேரடி தொடர்பில் உள்ள உத்தியோகத்தர்கள **206**
- விற்பனை உத்தியோகத்தர்கள**187**

**2016-2017**

மொத்த ஊழியர்கள 425

- கம்பனியுடன் நேரடி தொடர்பில் உள்ள உத்தியோகத்தர்கள **205**
- விற்பனை உத்தியோகத்தர்கள **220**

# இணையத்தள சேவை விநியோக அமைப்பு

## ERP மென்பொருளின் பிரதான சிறப்பம்சங்கள்

நிறுவனத்தின் வளங்களை திட்டமிடலுக்கான நுசீ மென்பொருள் பரந்த அடிப்படை செயற்திறன் மூலம் காரியாலய கடமைகள் பொருள் கணக்கெடுப்பு முகாமைத்துவம், மாற்று விநியோக முகாமைத்துவம், மனிதவளங்கள், நிதிமுகாமைத்துவம், வாடிக்கையாளர் நல்லுறவு முகாமைத்துவம் போன்றவற்றின் முக்கிய அம்சங்களின் உதவக்கூடியதாக இருக்கின்றது. நுசீ மென்பொருள் செயற்பாடு நிறுவனத்தின் முழுமையான வர்த்தக செயற்பாட்டை முன்னேற்றுவதற்கு உதவியாக அமையும்.




## எஸ்.ரி.சி. நிறுவனத்திற்கு ERP மென் பொருட்களினால் ஏற்படும் நன்மைகள்

- பொருள் விபரப்பட்டியல், கொள்வனவுதரவு, ஆகியவற்றை ஒரே அமைப்பின் கீழ் கொண்டு வந்து சரியான விலையை முன்கூட்டியே தீர்மானிப்பதற்கும் திறமையின்மையை குறைப்பதற்கும் உதவக்கூடிய வகையில் நெருக்கடியான தகவல் தன்னிச்சை வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் விற்பனை மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை நெறிப்படுத்துதல்.
- மனித தவறுகளை தவிர்த்து ஒரே பணியை இரு தடைவ செய்வதையும் தவிர்த்தல்.
- வர்த்தக தொடர்புகளை எற்படுத்தும் போது இடம்பெறும் சிக்கல்களை தவிர்க்க முகாமைத்துவத்தின் மூலம் தீர்மானித்தல்.
- விலை மதிப்பற்ற வர்த்தகத்துறையின் உலகளாவிய கண்ணோக்கை தெளிவாக பெறக்கூடிய வாய்ப்பை பெருக்கக்கூடிய கூட்டுறவு புள்ளி விபரங்களை கூடுதலாக வைப்பு செய்தல் மற்றும் வர்த்தகத்தின் நன்மைக்காக பொதுவான செய்திறன் அளவுகோளை உருவாக்குதல்.
- வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்புடைய வகையில் கொள்வனவு செயற்பாட்டுக்கு ஆதரவளித்து கொள்வனவு செய்யும் மையத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அங்கீகரிக்கப்படாத அநாவசிய செலவுகளைக் குறைத்தல்.
- குறிப்பிட்ட காலத்திற்குள் பாவனையாளர்களை திருப்திபடுத்தக் கூடிய வகையில் அவர்களுக்கு சரியான பின்னூட்டல்களை பெற்றுக் கொடுப்பதன் மூலம் சேவைகளை மேலும் நெறியாக கையாளல்.
- வளங்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு உதவக்கூடிய வகையில் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு வளங்கள் வீணாவதை தவிர்த்தல்.
- வர்த்தக செயற்பாடுகளை சீராக நெறிப்படுத்துவதன் மூலம் இலகுவாக சரியான முடிவுகளை எடுக்க உதவுதல்.
- நிறுவனத்திற்குள்ளும் வெளியிலும் ஒளிவு மறைவற்ற முறையில் தகவல்களை பெற்றுக் கொடுப்பதன் மூலம் செயற்பாடுகளை அமைப்புக்குள் வெளிப்படுத்துவதற்கு இது உதவியாகஅமையும்.
- நிறுவனங்களின் வளங்களை திட்டமிடும் அமைப்பு அதி உயர் தகவல்களின் பாதுகாப்பு மற்றும் நிறுவனம் வளர்ச்சியடைவதற்கும் உறுதுணை புரியும்.
- இது வர்த்தகத் தேவைகள் மற்றும் தொழில்நுட்பத்தை மாற்றமடையச் செய்வதற்கு உதவும்

# வர்த்தக ஆளுமை

கடந்த ஆண்டில் எஸ்.ரி.சி. நிறுவனத்தின் முகாமைத்துவம் நிறுவனத்தின் வணிக செயற்பாடுகளின் ஆளுமைத் திறனுக்கு புத்துயிர் அளிக்க எத்தணித்தது. இத்துடன் இந்நிறுவனத்திற்கு தனியான உள்ளக கணக்காய்வு பிரிவொன்றும் இருக்கிறது. இதற்கு தேர்ச்சி பெற்ற கணக்காளர் ஒருவர் தலைமைத்தாங்குகிறார். இத்துடன் வேறொரு கணக்காய்வு குழுவும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கும்.

## சபை அங்கத்தவர்கள்

தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளர்
கலாநிதி ஏ.எம் ஜெமீல்

- திரு.எஸ்.எல்.டீன்
  செயற்பாட்டுப் பணிப்பாளர்
- திரு. டி. ஜீவநாதன்
  பணிப்பாளர்
- திரு. வீ. நிதர்ஷன்
  பணிப்பாளர்
- திரு. ரி.வி. வீரசேன
  பணிப்பாளர்
- திரு. எஸ்.இலங்கதிலக்க
  பணிப்பாளர்
- திரு. கே. ஆரியவன்ச
  பணிப்பாளர்

## கணக்காய்வு குழு அங்கத்தவர்கள்

திரு. ரி.வி. வீரசேன
குழு தலைவர்

- திரு. டி. ஜீவநாதன்
  பணிப்பாளர்
- திரு. வீ. நிதர்ஷன்
  பணிப்பாளர்
- திரு. எஸ்.இலங்கதிலக்க
  பணிப்பாளர்
- திரு. கே. ஆரியவன்ச
  பணிப்பாளர்

## கிடைக்கக்கூடிய வணிக முகாமைத்துவ ஆவணங்கள்




1) வணிகத் திட்டம் 2011.˙.12 - 2015.˙.16
2) வருடாந்த அறிக்கை 2015.˙.2016
3) எஸ்.ரி.சி. பொருள் கொள்வனவு நடைமுறை
4) எஸ்.ரி.சி. நடவடிக்கைத் திட்டம்
5) எஸ்.ரி.சி. பொருள் விபரங்கள்
6) எஸ்.ரி.சி. விபரம்
7) எஸ்.ரி.சி. கடன் விற்பனைக் கொள்கை

# நிதி சிறப்பம்சங்கள்

| | 2016 / 2017 ரூபா. 000 ச | 2015 / 2016 ரூபா. 000 ச | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **செயற்பாடு** | | | |
| விற்பனை புரள்வு | 3,748,665 | 2,948,592 | 27% |
| செயற்பாட்டு இலாபம் | 109,116 | 92,684 | 18% |
| வரிக்கு முன் இலாபம் | 61,177 | 30,681 | 99% |
| வரிக்கு பின் இலாபம் | 51,503 | 25,938 | 99% |
| **ஐந்தொகை** | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 493,965 | 548,206 | -10% |
| நடைமுறைச் சொத்துக்கள் | 2,156,171 | 2,145,948 | 0% |
| நடைமுறை பொறுப்புகள் | 1,763,470 | 1,825,173 | -3% |
| நடைமுறையல்லா பொறுப்புகள் | 127,600 | 161,419 | -21% |
| கம்பனி மூலதனம் மற்றும் இருப்புகள் | 759,065 | 707,562 | 7% |
| **காசுப் பாய்ச்சல்** | | | |
| செயற்பாட்டு நடவடிக்கையின் மூலம் நிகர பண அதிகரிப்பு | 92,053 | 275,898 | -67% |
| செயற்பாட்டு நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட பணம் | 80,043 | 267,401 | -70% |
| முதலீட்டு நடவடிக்கையின் மூலம் நிகர பண அதிகரிப்பு | 28,340 | 13,617 | 108% |
| நிதி நடவடிக்கைகள் மூலம் நிகர பண அதிகரிப்பு | 117,706 | (261,098) | -55% |
| **ஒரு பங்கின் விபரம்** | | | |
| ஒரு பங்கின் மூலம் கிடைக்கும் வருமானம் | 4 | 2.67 | 50% |
| ஒரு பங்குக்கான நிகர சொத்து | 75.91 | 70.76 | 7% |
| **பிரதான விகிதாசாரம்** | | | |
| ஒரு பங்கின் மூலம் கிடைக்கும் வருமானம் | 18% | 19% | -1% |
| ஒரு பங்குக்கான நிகர விகிதாசாரம் | 1% | 1% | 0% |
| துரித விகிதாசாரம் | 0.76 | 0.83 | -0.07 |
| நடைமுறை விகிதாசாரம் | 1.22 | 1.18 | 0.05 |
| அதிகரிக்கும் விகிதாசாரம் | 1.57 | 1.01 | 0.56 |
| பங்கு மூலம் கிடைப்பவை (ROE) | 0.07 | 0.04 | 0.03 |
| சொத்துக்கள் மூலம் கிடைப்பவை (ROA) | 0.019 | 0.009 | 0.01 |

# வரைபட விளக்கம்

| வருடம் | விற்பனை புரழ்வு (ரூ.மி) |
|---|---|
| 05 / 06 | 367 |
| 06 / 07 | 244 |
| 07 / 08 | 321 |
| 08 / 09 | 509 |
| 09 / 10 | 875 |
| 10 / 11 | 1,093 |
| 11 / 12 | 1,872 |
| 12 / 13 | 2,269 |
| 13 / 14 | 3,052 |
| 14 / 15 | 3,862 |
| 15 / 16 | 2,949 |
| 16 / 17 | 3,749 |

விற்பனை புரழ்வு (ரூ.மி)




| வருடம் | வரிக்கு முன்னர் இலாபம் (ரூ.மி) |
|---|---|
| 05 / 06 | (29) |
| 06 / 07 | (58) |
| 07 / 08 | 4 |
| 08 / 09 | 28 |
| 09 / 10 | 52 |
| 10 / 11 | 59 |
| 11 / 12 | 82 |
| 12 / 13 | 97 |
| 13 / 14 | 74 |
| 14 / 15 | 11 |
| 15 / 16 | 31 |
| 16 / 17 | 61 |

வரிக்கு முன்னர் இலாபம் (ரூ.மி)




| வருடம் | மொத்த சொத்துக்கள் (ரூ.மி) |
|---|---|
| 05 / 06 | 450 |
| 06 / 07 | 538 |
| 07 / 08 | 530 |
| 08 / 09 | 600 |
| 09 / 10 | 2,639 |
| 10 / 11 | 2,028 |
| 11 / 12 | 2,469 |
| 12 / 13 | 2,059 |
| 13 / 14 | 2,275 |
| 14 / 15 | 3,051 |
| 15 / 16 | 2,694 |
| 16 / 17 | 2,650 |

மொத்த சொத்துக்கள் (ரூ.மி)



# வரைபட விள்கம்

| வருடம் | மொத்த பங்கு (ரூபா. மி) |
|---|---|
| 05 / 06 | 238 |
| 06 / 07 | 349 |
| 07 / 08 | 352 |
| 08 / 09 | 372 |
| 09 / 10 | 441 |
| 10 / 11 | 484 |
| 11 / 12 | 572 |
| 12 / 13 | 640 |
| 13 / 14 | 686 |
| 14 / 15 | 695 |
| 15 / 16 | 707 |
| 16 / 17 | 759 |

மொத்த பங்குகள் (ரூ. மி)




ஒரு பங்கு மூலமான வருமானம் (ரூபா. மில்லியன்)

| வருடம் | EPS (Rs.) |
|---|---|
| 05 / 06 | (2.90) |
| 06 / 07 | (5.83) |
| 07 / 08 | 0.36 |
| 08 / 09 | 1.94 |
| 09 / 10 | 4.84 |
| 10 / 11 | 4.36 |
| 11 / 12 | 6.32 |
| 12 / 13 | 6.69 |
| 13 / 14 | 5.07 |
| 14 / 15 | 1.54 |
| 15 / 16 | 2.67 |
| 16 / 17 | 4.00 |




மூலதன பயன்பாட்டினால் கிடைக்கும் பிரதிலாபம் (மூ)

| வருடம் | ROCE (Rs.) |
|---|---|
| 05 / 06 | -10.98% |
| 06 / 07 | -15.98% |
| 07 / 08 | 1.10% |
| 08 / 09 | 4.77% |
| 09 / 10 | 11.08% |
| 10 / 11 | 13.70% |
| 11 / 12 | 13.18% |
| 12 / 13 | 13.92% |
| 13 / 14 | 11.84% |
| 14 / 15 | 6.54% |
| 15 / 16 | 13.10% |
| 16 / 17 | 14.38% |



# வருமான வரைபடம்
# 2000/2001 வழ 2016/2017



# எஸ்.ரி.சியின் 2016-2017ஆம் ஆண்டுக்கான பிரிவுகளின் செயற்திறன்

## வருமான வழிகள்




| பிரிவு | வருமானம் (ரூபா) |
|---|---|
| இரசாயன மற்றும் இரசாயனம் சார்ந்தவை | 802,835,738 |
| ICT பொருட்கள் | 538,744,353 |
| காரியலய விநியோகம் | 405,719,257 |
| தானியங்கிப் பொருட்கள் | 203,975,820 |
| சுங்கத்தீர்வையற்ற கடைகள் | 732,388,586 |
| மின்னிணைப்பு மற்றும் இலத்திரணியல் | 277,175,889 |
| விசேட திட்டப் பிரிவு | 219,095,103 |
| வீட்டுக்கு தேவையான பொருட்கள் | 145,476,571 |
| நிர்மாண மற்றும் இயந்திரப் பொருட்கள் | 210,690,438 |
| குறிப்பிடப்படாத பொருட்கள் | 212,563,499 |
| | **3,748,665,253** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL 'S DEPARTMENT**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>**My No** | ரீசீஎம;/ஈ/எஸ்ரீசீ/2016/17/எவ்ஏ | ඔබේ අංකය<br>உமது இல<br>**Your No** | | දිනය<br>திகதி<br>**Date** | 2017 ஒக்தோபர் 19 |

ஸ்ரீலங்கா ஸ்ரேட் ரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிட்டட்டின்
பங்குதாரர்களிற்கு

ஸ்ரீலங்கா ஸ்ரேட் ரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிட்டட்டின் 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ஸ்ரீலங்கா ஸ்ரேட் ரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிட்டட்டின் ('கம்பனி") 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

## நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

## கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான
பிறழ் கூற்றுக்கள் அற்றவையா

என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## அபிப்பிராயம்

2017 மார்ச் 31 இல் உள்ளவாறான ஸ்ரீலங்கா ஸ்ரேட் ரேடிங் (ஜெனரல்) கோப்பரேஷன் லிமிட்டட்டின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## ஏனைய விடயம்

2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களானது பொதுத் தொழிலிலுள்ள இன்னொரு பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் கணக்காய்வு செய்யப்பட்டு 2016 ஒக்தோபர் 31 இல் அந்நிதிக்கூற்றுக்கள் மீது முனைப்பழியற்ற அபிப்பிராயமொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

பராளுமன்றத்திற்கான அறிக்கை
அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியலப்படுத்தப்படும்

டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# தொகுக்கப்பட்ட வருமான அறிக்கை

31 மார்ச் 2007ஆம் ஆண்டின் முடிவடைந்த வருடம்

| | குறிப்பு | 2016/2017 ரூபா . சதம் | 2016/2017 ரூபா . சதம் |
|---|---|---|---|
| வருமானம் | 03 | 3,748,665,254 | 2,948,592,334 |
| விற்பனை செலவுகள் | | (3,090,336,662) | (2,388,634,449) |
| நிகர இலாபம் | | 658,328,592 | 559,957,885 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் / (செலவினம்) | 04 | 12,220,822 | 7,649,790 |
| | | **670,549,414** | **567,607,675** |
| விநியோக செலவினம் | 05 | 112,456,769 | 88,554,575 |
| நிர்வாக செலவினம் நிர்வாக செலவினம் | 06 | 464,968,460 | 385,630,480 |
| | | **577,425,229** | **474,185,055** |
| வட்டி மற்றும் வரிக்கு முன்னர் பெறுகைகள் | | 93,124,185 | 93,422,620 |
| நிகர நிதி வருமானம் (செலவினம்) | 07 | (47,938,698) | (62,002,058) |
| வரிக்கு முன்னர் இலாபம் | | 45,185,487 | 31,420,562 |
| வருமான வரி செலவினம் | 08 | (5,196,600) | (4,742,718) |
| வருட நிகர இலாபம் | | **39,988,886** | **26,677,844** |
| ஏனைய ஒப்பீட்டு வருமானம் | | | |
| இலாபம் / (நட்டம்) ஊழியர் நன்மைகள் | | 15,992,170 | (739,455) |
| ஒத்திவைக்கப்பட்ட வரிக் கட்டணம் | | (4,477,808) | |
| ஏனைய மொத்த ஒப்பீட்டு வருமானம் - தேறிய வரி | | **11,514,362** | **(739,455)** |
| வருடத்துக்கான மொத்த ஒப்பீட்டு வருமானம் - தேறிய வரி | | **51,503,249** | **25,938,389** |
| Earnings per share attributable to the owners of the Corporation during the year | | | |
| ஒரு பங்குக்கான வருமானம் | 09 | 4.00 | 2.67 |

இந்த நிதி அறிக்கையில் ஒருங்கிணைந்த பகுதியாக கணக்கியல் கொள்கைகள் மற்றும் தெளிவுபடுத்தும் குறிப்புகள் 7 தொடக்கம் 30 வரை காணப்படுகின்றன.
(அடைப்புக்குறிக்குள் உள்ளவை கழிக்கப்பட்டுள்ளன)

# நிதி நிலை அறிக்கை

31 மார்ச் 2017ஆம் ஆண்டுக்கான

| சொத்துக்கள் | குறிப்பு | 2016/2017<br>ரூபா . சதம் | 2015/2016<br>ரூபா . சதம் |
|---|---|---|---|
| நடைமுறை அல்லா சொத்துக்கள் | | | |
| சொத்து, பொறி மற்றும் உபகரணம் | 10 | 475,084,106 | 530,246,053 |
| பங்கு முதலீடு | 11 | 20 | 20 |
| ஊழியர்களுக்கு கடன் வழங்கப்பட்டது | 12A | 7,729,096 | 6,146,873 |
| இலகு கடன் திட்டம் | 12B | 2,712,937 | 4,823,475 |
| தேறிய ஒத்திவைக்கப்பட்ட சொத்து வரி | 18 | 8,438,473 | 6,989,688 |
| **மொத்த நடைமுறை சொத்துக்கள்** | | **493,964,631** | **548,206,110** |
| | | | |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| சரக்கு | 13 | 813,863,775 | 622,150,159 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறக்கூடியவை | 14 | 903,544,453 | 663,405,062 |
| இலகுவழி கடன் திட்டம் | 12A | 3,601,876 | 3,428,276 |
| இலகுவழி கடன் திட்டம் | 12B | 6,253,428 | 7,156,590 |
| இறக்குமதி அரிசி மானியமாக பெற்றவை | | - | 450,594,190 |
| குறுங்கால முதலீட்டு நிலையான வைப்பு | | 407,447,815 | 380,122,597 |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 15 | 21,459,321 | 19,091,474 |
| | | 2,156,170,669 | 2,145,948,348 |
| **மொத்த சொத்துக்கள்** | | **2,650,135,297** | **2,694,154,458** |
| | | | |
| பங்கு மற்றும் பொறுப்புகள் | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள் | | | |
| சாதாரண பங்கு வழங்கல் 10,000,000 ஒவ்வொன்றும் ரூபா 10 | | 100,000,000 | 100,000,000 |
| பொது ஒதுக்கீடுகள் | | 45,607,646 | 45,607,646 |
| மறுமதிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகள் | | 241,108,234 | 241,108,234 |
| ஏனைய ஒதுக்கீடுகள் | | (3,349,743) | (14,864,106) |
| மீளப்பெறுகைகள் | | 375,699,364 | 335,710,478 |
| **மொத்த பங்குகள்** | | **759,065,500** | **707,562,254** |
| | | | |
| நடைமுறை அல்லா பொறுப்புகள் | | | |
| பொறுப்புகளுக்கான வட்டி - குத்தகை | 16 | 4,991,716 | 6,620,436 |
| ஓய்வூதிய நன்மைக்கான பொறுப்பு | 17 | 24,217,549 | 39,743,461 |
| பொறுப்புகளுகக்ான நிகர வரி- கடன் | 19 | 98,390,380 | 115,055,550 |
| | | 127,599,645 | 161,419,446 |
| | | | |
| நடைமுறை பொறுப்புகள் | | | |
| வருமான வரி | | 9,123,171 | 4,092,791 |
| குறுங்கால கடன்கள் | 19 | 752,143,787 | 720,062,212 |
| பொறுப்புகளுகக்ான வட்டி | 16 | 5,715,692 | 10,720,491 |
| விற்பனை மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 20 | 666,304,515 | 771,806,241 |
| வங்கி மேலதிக பற்று | 21 | 330,182,987 | 318,491,023 |
| | | 1,763,470,151 | 1,825,172,758 |
| **மொத்த பங்கு மற்றும் பொறுப்புகள்** | | **2,650,135,297** | **2,694,154,457** |

2007ஆம் ஆண்டு கம்பனி சட்டம் 7க்கு அமைய இந்த நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதி முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றை தயாரித்தல் மற்றும் வெளியிடுவதற்கான பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு காணப்படுகிறது. ஸ்ரீ லங்கா ஸ்டேட் டிரேடிங் கோப்பரேசன் லிமிட்டெட் நிறுவன தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது.

தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளர்          பணிப்பாளர்

ERNST & YOUNG Chartered Accountants COLOMBO

இந்த நிதி அறிக்கையில் ஒருங்கிணைந்த பகுதியாக கணக்கியல் கொள்கைகள் மற்றும் தெளிவுபடுத்தும் குறிப்புகள் 7 தொடக்கம் 30 வரை காணப்படுகின்றன.

(அடைப்புக்குறிக்குள் உள்ளவை கழிக்கப்பட்டுள்ளன)

14 செப்டெம்பர் 2017
கொழும்பு

# பங்குகளில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான அறிக்கை

2017 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | மொத்த மூலதனம் ரூபா . சதம் | மறுமதிப்பீட்டு கையிருப்பு ரூபா . சதம் | பொதுவான கையிருப்பு ரூபா . சதம் | ஏனைய கையிருப்பு ரூபா . சதம் | மீளப் பெறுகைகள் இலாபம்/(நட்டம்) ரூபா . சதம் | மொத்தம் ரூபா . சதம் |
|---|---|---|---|---|---|---|
| 2015 ஏப்ரல் 1 மீதி | 100,000,000 | 241,108,234 | 45,607,646 | (14,124,651) | 322,374,838 | 694,966,067 |
| கடந்த வருட சீராக்கங்கள் | - | - | - | - | (8,342,204) | (8,342,204) |
| ஆண்டுக்கான நிகர இலாபம் (நட்டம்) | - | - | - | | 26,677,844 | 26,677,844 |
| ஓய்வுதிய கொடுப்பனவுக்கு சரியான இலாபம் (நட்டம்) | - | - | - | (739,455) | - | (739,455) |
| முன்மொழியப்பட்ட நிகர பங்கு (மொத்தம்) | - | - | - | - | (5,000,000) | (5,000,000) |
| **2016 மார்ச் 31 மிகுதி** | **100,000,000** | **241,108,234** | **45,607,646** | **(14,864,106)** | **335,710,478** | **707,562,254** |
| 2016 ஏப்ரல் 1 மிகுதி | 100,000,000 | 241,108,234 | 45,607,646 | (14,864,106) | 335,710,478 | 707,562,254 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் / (நட்டம்) | - | - | - | - | 39,988,886 | 39,988,886 |
| ஓய்வுதிய கொடுப்பனவுக்கு சரியான இலாபம் (நட்டம்) | - | - | - | 11,514,362 | - | 11,514,362 |
| **2017 மார்ச் 31 மிகுதி** | **100,000,000** | **241,108,234** | **45,607,646** | **(3,349,743)** | **375,699,364** | **759,065,500** |

இந்த நிதி அறிக்கையில் ஒருங்கிணைந்த பகுதியாக கணக்கியல் கொள்கைகள் மற்றும் தெளிவுபடுத்தும் குறிப்புகள் 7 தொடக்கம் 30 வரை காணப்படுகின்றன. (அடைப்புக்குறிக்குள் உள்ளவை கழிக்கப்பட்டுள்ளன)

# காசுப் பாய்ச்சல் கூற்று

2017 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானல'லன2017

| | 2016/2017<br>ரூபா . சதம் | 2015/2016<br>ரூபா . சதம் |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான காசுப் பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னர் இலாபம் | 45,185,487 | 31,420,562 |
| **சீராக்கங்கள்** | | |
| குத்தகை வட்டி | 2,565,776 | 4,112,509 |
| பெறுமானத்தேய்வு / விரயம் | 49,330,926 | 60,255,399 |
| வட்டி வருமானம் | (52,025,742) | (29,703,530) |
| மேலதிக பற்று வட்டி கடன் வழங்கல் ரசீது | 99,964,440 | 88,742,969 |
| ீநு மீதான இலாப / (நட்ட) கழிவு | 19,833,225 | (40,498) |
| இருப்பு மற்றும் அறவிடமுடியாக் கடன் | (6,932,572) | 418,937 |
| கடந்த வருட சீராக்கங்கள் | - | (8,342,204) |
| ஓய்வூதிய நன்மைக்கான ஒதுக்கீடுகள் | 6,383,794 | 4,526,614 |
| **இலாபத்துக்கு முன்னர் செயற்பாட்டு மூலதன செலவினம்** | **171,361,705** | **151,390,756** |
| (மேலதிகம்) குறைவு கையிருப்பு | (191,713,616) | 270,036,394 |
| (மேலதிகம்) குறைவு வர்த்தகம் மற்றும் ஏனைய பெறுகைகள் | (235,663,682) | 118,718,817 |
| (மேலதிகம்) குறைவு அரசி இறக்குமதி விலை மானிய பெறுகைகள் | 450,594,190 | (53,968,243) |
| (மேலதிகம்) குறைவு இலகு கொடுப்பனவு கடன் திட்டம் | 3,013,700 | (1,270,901) |
| (மேலதிகம்) குறைவு வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | (105,539,259) | (209,008,601) |
| **செயற்பாட்டுக்கான காசு பயன்பாடு** | **92,053,037** | **275,898,221** |
| WHT கொடுப்பனவு | (4,473,607) | (2,862,336) |
| வருமான வரி செலுத்தியது | (1,619,206) | (5,634,880) |
| பணிக்கொடை கொடுப்பனவு | (5,917,536) | - |
| **செயற்பாட்டு நடவடிக்கையின் மூலமான நிகர காசு** | **80,042,688** | **267,401,005** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் கையப்படுத்தல் | (17,475,150) | (15,592,969) |
| கழிவுகள் மீதான பெறுகைகள் | 1,078,700 | 526,000 |
| குறுங்கால முதலீடுகள் மூலம் பெற்றுக் கொண்ட வட்டி | 44,736,066 | 28,683,798 |
| **முதலீட்டு செயற்பாட்டு நிகர காசு** | **28,339,616** | **13,616,829** |
| நிதி செயற்பாடுகளினால் காசு பாய்ச்சல் | (27,325,218) | (21,348,696) |
| நிலையான வைப்பு முதலீடுகள் | 15,416,406 | (135,031,209) |
| மேலதிக பற்று வட்டி மற்றும் கடன் ரசீதுகள் | (96,512,051) | (88,742,969) |
| குத்தகை தவணைப் பணம் செலுத்தியது | (9,285,556) | (10,975,407) |
| பங்கு கொடுப்பனவு | - | (5,000,000) |
| **நிதி செயற்பாடுகளின் நிகர காசு மீதி** | **(117,706,419)** | **(261,098,281)** |
| நிகர அதிகரிப்பு (குறைவு) காசு மற்றும் காசு சமனானவை | (9,324,115) | 19,919,549 |
| வருட ஆரம்பத்தில காசு மற்றும் காசுக்கு சமனானவை | (299,399,551) | (319,319,100) |
| வருட இறுதியில காசு மற்றும் காசுக்கு சமனானவை (குறிப்பு எ) | (308,723,665) | (299,399,551) |

| குறிப்பு எ. காசு மற்றும் காசுக்கு சமனானவை பகுப்பாய்வு | 2016/2017<br>ரூபா . சதம் | 2015/2016<br>ரூபா . சதம் |
|---|---|---|
| **வங்கியில் உள்ள பணம்** | | |
| இலங்கை வங்கி (கணக்கு இல. 8859546) | 270,658 | 386,371 |
| சம்பத் வங்கி (கணக்கு இல. 000930000337) | 1,336,457 | 65,916 |
| சம்பத் வங்கி (கணக்கு இல.002930006974) | (23,041,483) | (9,538,856) |
| இலங்கை வங்கி (கணக்கு இல. 1060) | 20,347 | 20,597 |
| என்.டி.பி. வங்கி - (கணக்கு இல. - 106340003864) | 4,207,040 | 3,063,015 |
| மக்கள் வங்கி - குருநாகலை | 80,975 | (168,048) |
| மக்கள் வங்கி - மாத்தறை | 977,219 | 1,066,692 |
| மக்கள் வங்கி - கல்முனை | 967,159 | - |
| கையிருப்பில் உள்ள காசு | | |
| சில்லறைக் காசு முற்பணம் | 575,537 | 413,063 |
| கையிருப்பில் உள்ள பணம் | 12,644,243 | 13,772,453 |
| வங்கி மேலதிக பற்று | | |
| மக்கள் வங்கி - (கணக்கு இல - 004100120210918) | (299,836,278) | (307,390,918) |
| மக்கள் வங்கி - கண்டி | 379,686 | 303,367 |
| என்.டி.பி. வங்கி - (கணக்கு இல. - 106340003864) | (7,305,226) | (1,393,201) |
| | **(308,723,666)** | **(299,399,550)** |

இந்த நிதி அறிக்கையில் ஒருங்கிணைந்த பகுதியாக கணக்கியல் கொள்கைகள் மற்றும் தெளிவுபடுத்தும் குறிப்புகள் 7 தொடக்கம் 30 வரை காணப்படுகின்றன. (அடைப்புக்குறிக்குள் உள்ளவை கழிக்கப்பட்டுள்ளன)

# ஆம் நிதி கூற்றுக்கான குறிப்புகள்

## 1. பொதுவான தகவல்

ஸ்ரீலங்கா ஸ்டேட் டிரேடிங் (ஜெனரல்) கோப்பரேசன் வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். இது இலங்கையில் செயற்படும் ஒரு நிறுவனமாகும். இந்தக் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் இல.100, நவம் மாவத்தை, கொழும்பு 2 அமைந்துள்ளது.

இவ்வாண்டின் கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் விற்பனையிலும், பொருட்களை அரசாங்க திணைக்களங்களுக்காக கொள்வனவு செய்யும் முகவராக செயற்படுகின்றது.

2017 மார்ச் 31ம் திகதி கம்பனியின் ஆளணி எண்ணிக்கை 425ஆகும் (2016 – 393).

## 2. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

### 2.1 அடிப்படை தயார் நிலைப்படுத்தல்

முழுமையான வருமானம் நிதி நிலை பற்றிய அறிக்கை, பங்கு மாற்றம் பற்றிய அறிக்கை மற்றும் காசுப் பாய்ச்சல் உடனான கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள். (நிதி அறிக்கைகள்) இவை இலங்கை கணக்கியல் தரத்துக்கு ஏற்புடைய வகையில் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை பட்டயக் கணக்காளர் அமைப்பு 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

நிதி நிலை அறிக்கையை 2017 செப்டெம்பர் 14ஆம் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியது.

2.1.2 அடிப்படை சமர்ப்பணம்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செலவை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டின் கீழ் இந்த நிதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, நிதி நிலை அறிக்கையில் பொருட்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(ய) இலங்கை கணக்கியல் தரம் 19இன் கீழ் ஓர் அலகின் கடன் அடிப்படையை வைத்து இலாபமடையும் கோட்பாடு அளவிடப்படுகிறது.

பணிப்பாளர்கள் குறிப்பிடத்தக்க எதிர்காலத்தில் கம்பனி சிறப்பாக சேவையை மேற்கொள்ள முடியுமென்று மதிப்பீடு செய்துள்ளதுடன் இதனால் கம்பனி நட்டமடைவதையோ அல்லது செயலழிப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் மதிப்பீடு செய்துள்ளார்கள்.

2.1.3 ஒப்பீட்டு பார்ப்பதற்கான தகவல்

முன்னைய ஆண்டின் தகவல்கள் மீண்டும் தேவையின் அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டு இவ்வாண்டுக்கான சமர்ப்பணம் ஊர்ஜிதம் செய்யப்படுகிறது.

2.1.4 மதிப்பீடு மற்றும் எடுக்கும் முடிவுகளைப் பயன்படுத்துதல்

SLFRS/LKAS க்கு ஏற்புடைய வகையில் நிதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் முகாமைத்துவம் முடிவுகளை எடுத்தல், மதிப்பீடு செய்து கணக்கியல் கொள்கைகளை நெறிப்படுத்தி சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் செலவுகள் ஆகியவற்றின் உண்மை நிலைக்கு உகந்த வகையில் நெறிப்படுத்துதல். இதனால், மதிப்பீடு செய்த நிலைப்பாட்டைவிட உண்மையான நிலைப்பாடு மாறுபட்டிருக்கும்.

மதிப்பீடுகள் மற்றும் எதிர்பார்ப்புகள் நாளாந்த அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. எந்தக் காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்டது என்பதில் மாற்றங்களை செய்து அதனை எதிர்காலப் பகுதியில் பயன்படுத்துவதற்கும் கணக்கியல் மதிப்பீடுகள் மாற்றப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது.

மதிப்பீடு பற்றிய பிரதான தகவல் ஆகியவற்றை நெறியான முறையில் மற்றும் தீர்மானிக்கக்கூடிய வகையில் கணக்கியல் கொள்கைகள் இத்தகைய நிதி நிலை அறிக்கையின் குறிப்புகளில் முக்கியத்துவம் பெறுகிறது.

குறிப்பு 18 - இளைப்பாறிய இலாப ஏற்புடையத் தன்மையை மதிப்பீடு செய்தல்

இந்த நிதி அறிக்கையில் பணவீக்கத்துக்கு ஏற்புடைய வகையில் மாற்றங்கள் செய்யப்படவில்லை.

அடுத்துவரும் குறிப்புகளில் குறிப்பிடத்தக்க பொருத்தமான கொள்கைகளுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது.

2.1.5 வெளிநாட்டு நாணய மாற்று

ய. செயற்பாடு மற்றும் சமர்ப்பண நாணயம்

கம்பனியின் நிதி அறிக்கை பங்குச் சந்தையின் செயற்பாட்டின் அடிப்படை பொருளாதார சூழ்நிலைக்கு அமைய நாணயத்தின் பயன்பாடு மதிப்பிடப்படுகிறது. இந்த நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாவில் கம்பனியின் நிதி செயற்பாட்டுக்கு அமைய குறிப்பிடப்படுகிறது.

டி. செயற்பாடுகள் மற்றும் சமநிலைப்படுத்தல்கள்

வெளிநாட்டு நாணய செயற்பாடுகள் நாணயமாற்று விகிதாசாரத்தை குறிப்பிட்ட நாட்களுக்கு அமைய செயற்பாட்டு நாணயமாக பயன்படுத்தப்படுகிறது. வருட இறுதியில் உள்ள வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தில் நாணயத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அடிப்படையில் வெளிநாட்டு நாணயம் அங்கீகரிக்கப்பட்டு அதனடிப்படையில் முழுமையான வருமானம் நிர்ணயிக்கப்படுகிறது. நாணய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் எஞ்சியவை வருட இறுதியில் நாணயமாற்று விகிதாசாரமாக மாற்றப்படுகிறது.

### 2.2. சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீடு பற்றிய அடிப்படை செயற்பாடு

2.2.1 சொத்துக்கள், தொழிற்சாலைகள் மற்றும் உபகரணங்கள்

2.2.2. அங்கீகரித்தல், மதிப்பீடு செய்தல்

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண வகையொன்றின் செலவானது அதன் கொள்வனவு விலை மற்றும் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கான பணியாற்று நிலைக்கு சொத்தினை கொண்டு வருவதற்கு நேரடியாக சாட்டத்தக்க எவையேனும் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துகளின் செலவானது பொருட்களின் செலவு, நேரடி ஊழியம் மற்றும் சொத்தின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கான பணியாற்று நிலைமைக்கு அச்சொத்தினைக் கொண்டு வருவதற்கு நேரடியாக சாட்டத்தக்க எவையேனும் செலவுகளை உள்ளடக்குகின்றது. பொருட்களை கழட்டுதல் மற்றும் அகற்றுதல் அத்துடன் அவை அமையப் பெற்றுள்ள இடத்தினை மீளமைத்தல் மற்றும் தகுதி பெறு சொத்துகள் மீதான கடன்படுதல் செலவுகள் என்பனவற்றையும் உள்ளடக்கும்.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் வகையொன்றின் பாகங்கள் வேறுபட்ட பயன்பாட்டு ஆயுட்காலத்தினை கொண்டிருக்கின்ற போது அவை, ஆதனம், பொறித்தொகுதி, மற்றும் உபகரணங்களின் (பிரதான கூறுகள்) வேறான வகைகளாக கணக்கிடப்படுகின்றன.

கொண்டு செல்கின்ற தொகை மீள அறவிடப்பட முடியாதிருக்கலாம் என

சுட்டிக் காட்டுகின்ற சூழ்நிலைகளில் உள்ள நிகழ்வுகளின் போது அல்லது மாற்றங்களின் போது ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் கொண்டு செல்கின்ற தொகை மதிப்புக் குறைப்பிற்காக மீளாயப்படுகின்றன. சொத்து கொண்டு செல்லும் தொகையானது அதன் மதிப்பிடப்பட்ட மீள அறவிடத்தக்க தொகையினை விட பெரிதாகவிருப்பின், சொத்தொன்று கொண்டு செல்கின்ற தொகையானது அதன் மீள அறவிடத்தக்க தொகைக்கு உடனடியாக பதியப்படும்.

காணியும் கட்டங்களும் 2006 இல் செய்யப்பட்ட மீள் விலை மதிப்பீடு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன. எனினும், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்துகின்ற போதிலும் காணி மற்றும் கட்டங்களின் மீள் விலை மதிப்பீட்டின் சாதகமான நலன்கள், அதனைத் தொடர்ந்து ஏற்படவுள்ள கணிசமான செலவுகளை முக்கியமாக பிணக்கிற்குள்ளாகாது என்பதனாலும் மேலும், மேற்குறித்த நிதியியல் தர நியமங்களில் எதிர்மறையான தாக்கம் எதுவும் தோன்றாது என்பதனாலும் அதன் பின்னர் காணியும் கட்டடங்களும் மீள் விலை மதிப்பிடப்படவில்லை.

பொறித்தொகுதியும் உபகரணங்களும் ஒன்று திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் ஏதேனும் ஒன்று திரட்டிய மதிப்பு குறைத்தல் இழப்புகளை கழித்து செலவில் குறிப்பிடப்படுகின்றன. காணியும் கட்டடங்களும், மீள் விலை மதிப்பீட்டு தினத்திற்கு பின்னர் கட்டடங்கள் மீதான ஒன்று திரட்டிய பெறுமானத் தேய்வு மற்றும் விதிக்கப்பட்ட மதிப்புக் குறைப்பு என்பவற்றைக் கழித்து நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. காணியும் கட்டடங்களும் அதனைத் தொடர்ந்து மீள் விலை மதிப்பிடப்படுமிடத்து, கொண்டு செல்கின்ற தொகையில் உள்ள ஏதேனும் அதிகரிப்பு, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங் காணப்பட்டு சொத்துகள் மீள் விலை மதிப்பீட்டு ஒதுக்கில் உள்ள பங்குமூலதனத்தில் ஒன்று திரட்டப்படகின்றது. அதே சொத்தின் முன்னைய அதிகரிப்புகளை எதிரீடு செய்கின்ற குறைத்தல்கள், பங்கு மூலதன மீள்விலை மதிப்பீட்டு ஒதுக்கு கூற்றிற்கு எதிராக விதிக்கப்படுகின்றன. எவையேனும் மிகைகளும் அனைத்து ஏனைய குறைத்தல்களும், அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் விதிக்கப்படுகின்றன.

2.2.3 பிற்காலத்தில் ஏற்படக்கூடிய செலவு

எவையேனும் ஆதனம், பொறித் தொகுதி, உபகரணம் வகையொன்றின் பாகமொன்றினை மாற்றீடு செய்யும் செலவானது அப்பாகத்தினுள் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனிக்கு கிடைக்கப்பெறும் மற்றும் அதன் செலவுகள் நம்பகரமாக அளவிடக்கூடியனவாகவிருக்கும் என்ற நிகழ்வு காணப்படுகின்ற போது வகை கொண்டு செல்கின்ற தொகைகள் இனங்காணப்படுகின்றது. மாற்றீடு செய்யப்பட்ட பாகத்தின் கொண்டு செல்கின்ற தொகையானது இனங்காணாது விடப்படுகின்றது.

ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்களின் நாளாந்த பராமரிப்புச் செலவுகள் அவை ஏற்படுகின்றவாறு இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

2.2.4 இனங்காணாமை

சொத்துக்கள், தொழிற்சாலைகள் மற்றும் உபகரணங்களினால் ஏற்படும் சோதாரம் அல்லது அதன் மூலம் எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகள் கிடைக்காது இருக்கும் போது அதனை அகற்றிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நிறுவனத்தின் ஏனைய இலாப நட்டக் கணக்கில் இது சேர்க்கப்படும்.

2.2.5 பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்வானது, சொத்தொன்றின் செலவு அல்லது செலவிற்காக பிரதியிடப்பட்ட ஏனைய தொகைகளாகவுள்ள பெறுமானத் தேய்விடத்தக்க தொகை மீது, சொத்தின் எஞ்சிய பெறுமதியினைக் கழித்து கணிக்கப்படுகின்றது.

சொத்தில் உற்பதித்துள்ள எதிர்கால பொருளாதார நலன்களின் எதிர்பார்க்கப்பட்ட நுகர்வு வடிவத்தினை இது மிகவும் நெருக்கமாக பிரதிபலிப்பதனால் ஆதனம், பொறித் தொகுதி, உபகரண வகையாக்கப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலத்தின் மீது நேர் நிரை அடிப்படையொன்றில் இலாபம் அல்லது நட்டத்தில் பெறுமானத் தேய்வான இனங்காணப்படுகின்றது. குத்தகைக் காலத்தின் இறுதியில் கம்பனி உடமையினை பெற்றுக் கொள்ளும் என்ற நியாயமான நிச்சயத்தன்மை இல்லாதவிடத்து குத்தகைச் சொத்துகள், குறுகிய குத்தகைக் கால அவற்றின் பயன்பாடுமிக்க ஆயட்காலம் மீது பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது.

காணிக்கு பெறுமானத் தேய்வு செய்யப்படுவதில்லை.

மதிப்பிட்ட பயன்பாட்டு ஆயட்காலமும் நடப்பு மற்றும் ஒப்பீட்டு காலங்களுக்கான பெறுமானத் தேய்வு வீதங்களும் பின்வருமாறு.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 7.5மூ |
| மோட்டார் வாகனம் | 20மூ |
| உபகரணங்கள் | 10மூ |
| தளபாடமும் பொறிகளும் | 10மூ |
| கணனிகள் | 33.33மூ |
| குத்தகைக் கட்டிடங்கள | குத்தகைக்கான காலத்திற்கு மாத்திரம் |

பெறுமானத் தேய்வு மேற்கொள்ளும் பயன்பாடுமிக்க ஆயுட்காலமும் எஞ்சிய பெறுமதிகளும் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமானவாறு சீர் செய்யப்படும்.

2.2.6. நிதி சொத்துக்கள் தரப்படுத்தல்

நிதியியல் சொத்துகளை பின்வரும் வகுதிகளாக கம்பனி வகைப்படுத்துகின்றது. இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் கடன்களும் வருமதிகளும், விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை, முதிர்வுக்காக வைக்கப்பட்டவை. நிதியியல் சொத்துகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த நோக்கங்களைச் சார்ந்து வகைப்படுத்தல் அமைந்திருக்கும். முகாமைத்துவமானது ஆரம்ப அடையாளப்படுத்தலில் அதன் நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தலினை நிர்ணயிக்கும். அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறும் கம்பனியானது இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியாக, விற்பனைக்காக கிடைக்கத்தக்கவையாக மற்றும் முதிர்வுக்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துகளை கொண்டிருக்கவில்லை. அனைத்து நிதியியல் சொத்துகளும் நியாயப் பெறுமதியில் கொடுக்கல் வாங்கல் செலவுடன் சேர்த்து ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன.

2.2.7 கடன் மற்றும் கிடைக்க இருக்கும் தொகை

கடன்கள் மற்றும் கிடைக்க இருக்கும் தொகைகள் நிலையான நிதி சொத்துக்களாக மதிக்கப்படாத வகையில் செயற்பாட்டு சந்தையில் பயன்படுத்தப்படும். அதில் தற்போதைய சொத்துக்கள் அறிக்கை

சமா்ப்பிக்கப்படும் தினத்தில் இருந்து பன்னிரண்டு மாதங்களுக்கு உட்பட்ட பொறுப்புகள் நிறைவடையும் காலத்துக்குள் இருந்தால் அவை தற்போதைய செயற்பாடு சொத்துக்களாக மதிக்கப்படுவதில்லை. கடன்கள் மற்றும் கிடைக்க இருக்கும் தொகைக்கு கிடைக்க வேண்டிய வட்டியையும் சேர்த்து அதன் செலவுத் தொகை நிர்ணயிக்கப்படும்.

இந்தக் கடன்கள் 12 மாதங்களுக்குள் தீர்க்காவிட்டால் அடுத்த ஆண்டின் கணக்குடன் வட்டியும் சேர்க்கும் நடைமுறை கையாளப்படும்.

2.2.8 நிதி தொடர்புடைய சாதனங்களின் பொறுப்புகள் மாற்றப்படுதல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் பெறுமதி சட்டபூர்வமாக மாற்றப்படுவதற்கு உரிமை இருக்கும் போது மாற்றப்பட வேண்டும். இவற்றின் பொறுமதியைப் பார்த்து பொறுப்புக்களை ஏக காலத்தில் தீர்த்துவிட வேண்டும்.

2.2.9 பலவீனமான நிதி சொத்துக்கள்

பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் கொண்டு செல்லப்படும் சொத்துகள்

கைவிடப்படுவதற்கான தவணை முறையில் சொத்துக்களுக்கான செலவினத்தை நிதி அறிக்கையில் குறிப்பிடுதல். இதன் மூலம் தற்போதைய காசுப் பாய்ச்சலையும் எதிர்காலத்தில் ஏற்படும் காசுப் பாய்ச்சலையும் பார்க்க முடியும்.

காசுப் பாய்ச்சல் அல்லது குழுமத்தின் நிதி சொத்துக்கள் பற்றிய சரியான மதிப்பீடுகளை செய்ய முடியாது போனால் சில சந்தர்ப்பங்களில் அந்த நிறுவனம் வங்குரோத்து நிலை அடையும். அதனால், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய காசுப் பாய்ச்சல் குறித்து அவதானமாக இருக்க வேண்டும்.

கடன்களைத் திரும்பப் பெறும் போது அதன் நஷ்டம் சொத்துக்களுக்கும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய காசுப்பாய்ச்சல் மதிப்பீட்டுக்கும் இடையில் இருக்கும் இடைவெளியை எடுத்துக் காட்டுவதாக அமையும்.

கைவசம் உள்ள சொத்துக்களின் தொகை குறையும் போது ஏற்படும் நஷ்டத்தை வருமான அறிக்கை எடுத்துக் காட்டுவதாக அமையும். பிரிதொரு காலத்தில் நஷ்டம் அதிகரிக்கும் வாய்ப்புகள் ஏற்பட்டால் எப்போதாவது ஏற்படும் நிகழ்வுடன் அதனை சேர்த்துக் கொள்ள வேண்டும். (கடன் வாங்கியவரின் கடன் அளவு முன்னேற்றம் அடைந்திருப்பதை இதற்கு காண்பிக்கலாம்)

2.2.10 நிதியியல் அல்லாத சொத்துகளின் மதிப்பு குறைத்தல்

